# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*2019, யூலை மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, யூன் மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***286 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *இவ்வாசகம், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் 144அ என்னும் பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டத்தைத் திருத்துகின்றதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, அப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரடியாக வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குவதற்கு நீதிவானுக்கு தத்துவமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.*

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

*ச.வ.- ஓ. 5/2018*

### 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் , 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 144அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 144 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டத்தின் 144அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*“சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டு மென்ற அவசியம் விசேட சூழ்நிலைகளின் கீழ் இல்லா தாக்கப்படலாம்.*

144அ. (1) நீதிவான் தனது தற்றுணிபின்பேரில் ஒவ்வொரு தடுத்துவைத்தல் காலப்பகுதியின் முடிவிலும் தடுத்துவைத்தல் காலப்பகுதியினை நீடிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அல்லது ஒவ்வொரு விளக்கத் தேதியன்றும் நீதிமன்றத்தில் எந்த சந்தேக நபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் அத்தகைய நீதிவான் முன்னர் குற்றவியல் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றதோ அந்த சந்தேக நபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரடியாக சமுகமளிக்கவேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கலாம்.

(2) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது நீதிமன்றத்தில் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரடியாக சமுகமளிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லாதாக்கப்படலாம் என நீதிவான் திருப்திப்படின், (3) ஆம் உட்பிரிவில்

குறித்துரைக்கப்பட்டவாறு, இயைபான ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரடியாக சமுகமளிக்கவேண்டுமென்ற அவசியம் அவ்வாறு இல்லாதாக்கப்படலாம்.

(3) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று பின்வருவோரால் செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி; அல்லது

(ஆ) விடயத்திற்கேற்ப, சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி; அல்லது

(இ) இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர்; அல்லது

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்படுகின்றாரோ அந்தச் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர்.

(4) நீதிவான் பின்வரும் ஏதுக்களின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபரை அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரை நேரில் சமுகமளிக்க வேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) சந்தேகநபரின் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஒன்று உள்ளவிடத்து அல்லது பாரதூரமான தீங்குவிளையுமென்ற பயமுள்ளவிடத்து;

(ஆ) சந்தேகநபரால் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறிற்கான பொது மக்களின் எதிர்விளைவு சமாதானத்தின் மீறுகை ஒன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளவிடத்து;

(இ) சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுப்புக்காவலிலிருந்து தப்பிச்செல்கின்ற அல்லது தடுப்புக் காவலிலிருந்து தன்னிச்சையின்றி அகற்றப்படுகின்ற சாத்தியமுள்ளவிடத்து; அல்லது

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடக் கூடிய சாத்தியமுள்ளவிடத்து.

(5) நீதிவானொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரடியாக நீதிமன்றத்துக்கு வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குமிடத்து, அதற்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(அ) ஒரு சட்டத்தரணிமூலம் பிரதி நிதித்துவப்படுத்தப்படுவதற்கும்; அத்துடன்

(ஆ) சமகாலச் செவிப்புல-கட்புல இணைப்பு கிடைக்கக்கூடியதாகவிருக்குமிடத்து அத்தகைய வசதிகளினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும்,

அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

(6) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம், அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரடியாக வருகை தருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதித்துறைப் பிரிவினுள் உள்ளவிடத்து, அத்தகைய நீதிவான், வழக்கைக் கூப்பிட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய தடுப்பிடத்துக்குச் சென்று அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றி கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

(7) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம், அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரடியாக வருகை தருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதித்துறைப் பிரிவுக்கு வெளியே அமைந்துள்ளவிடத்து, இயைபான நீதித்துறைப் பிரிவின் மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் தொடர்புகொள்ளுதலும், (6) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்துக்காக, சந்தேக நபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(8) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம் எந்த நீதிவானின் நீதித்துறைப்பிரிவினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் தடுப்பிடத்துக்குச் செல்ல இயலாதவராக வுள்ளவிடத்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வேறெவரேனும் நீதிவானுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுதலும், (6) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்துக்காகச் சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

*(9) ஏழாம் அல்லது (8) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த நீதிவானுடன் தொடர்பு கொள்ளப்பட்டதோ அந்த எவரேனும் நீதிவான், சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருகின்ற படிவம் கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய இடத்துக்குச் செல்லுதல் வேண்டுமென்பதுடன் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரடியாக வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானுக்கு, அத்தகைய சென்று பார்த்தமை பற்றி அதற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மீள அறிக்கையிடுதலும் வேண்டும்.*

*(10) உட்பிரிவு (6), (7) அல்லது (8) என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒரு சிறைச்சாலைக்குச் சென்று பார்க்கின்ற நீதிவானின் முன்னர் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட அத்தகைய எவரேனும் சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிறுத்துதலும் அத்தகைய நீதிவானுக்குத் தேவைப்பட்ட வசதிகளை அவருக்கு வழங்குதலும் அச்சிறைச்சாலைக் கண்காணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.